(c) the details of administrative set up of staff for this food supply system?

THE HON. SRI V. RAMAIAH: (a), (b) & (c) A paper[a] is placed on the Table of the House.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: அரிசி கொடுப்பதிலே, சென்னை நகரத்தில் ஜனத்தொகை அடிப்படையில் கணக்கிட்டு கொடுக்கிற அரிசி கட்டுபடி ஆகிறதா, அல்லது பற்றுக்குறை ஏற்படுகிறதா என்பதற்கு அமைச்சர் விளக்கம் தெரிவிப்பாரா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இப்போது நாம் சென்னை நகரத்தில் கொடுப்பது என்னவென்றால், ஒவ்வொரு 'அடல்ட்' சைல்டுக்கும் என்ன வேண்டும் என்று நிர்ணயம் செய்து அதைக் கொடுத்து கொண்டிருக்கிறோம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, அப்படி இருந்தால் அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து இன்னும் தேவைப்படுகிறது என்று சொல்கிறார்களா, அல்லது தேவையில்லை என்று சொல்கிறார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: நான் கொடுக்கக்கூடியதை மட்டும் தான் சொல்கிறேன்.

MR. SPEAKER: There is no statutory rationing. Therefore those who want rice can purchase it in the open market.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்குக் கொண்டு போவதைப் பொறுத்த வரையில் 10 லிட்டருக்கு மேல் அரிசி கொண்டு போகக் கூடாது என்று சொல்கிறார்கள். சென்னைக்கு வருகிறவர்கள் யாரைப் பார்த்தாலும் 2 படி அரிசி கொண்டு வருகிறார்கள். ஆகவே இந்த 10 லிட்டர் என்பதை 20 லிட்டராக உயர்த்தினால் இப்போது இருக்கும் நெருக்கடி வராது, இல்லையா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இது இந்தக் கேள்வியிலிருந்து எழவில்லை. பத்து லிட்டர் அரிசி அனுமதிச் சீட்டு வாங்காமலே கொண்டு வரலாம் என்பதற்குக் காரணம் இதற்கு முன்பு நிர்ணயம் செய்துள்ளதைப் பார்க்கும்போது ஏராளமான தவறுகள் நடந்தது. 10 லிட்டர் என்று ஏற்படுத்தியது கொண்டு வருபவரின் உபயோகத்திற்காக இருக்க வேண்டும் என்பதற்காக, இது ஒரு தொழிலாக மாறி விடக் கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

செய்யாற்றின் குறுக்கே பாலம் (செங்கம்)

* 156. கேள்வி.—திரு. எ. ஆறுமுகம்: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) செங்கம் அருகே செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எந்த நிலையிலுள்ளது?

---

[a] Printed as Appendix I on pages 517—518.

5th March 1965]

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The Government have since sanctioned the construction of a bridge across the Cheyyar at mile 29/6 of Polur-Chengam road at a cost of Rs. 3.50 lakhs. The Chief Engineer (Highways and Rural Works) has been permitted to take up the work for execution during the current year.

Sharing Krishna water with Madras City

* 157. *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state with reference to Legislative Assembly Question No. 345 answered on 20th March 1964—

(*a*) the steps taken to reach an agreement with the Government of Andhra regarding the supply of water to Madras City from the Krishna as suggested by the Gulhati Commission; and

(*b*) the details of the proposal under consideration?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The matter is still under the consideration of the Government.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தப் பிரச்னை இன்னும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இருப்பதாகச் சொன்னார்கள். எந்த அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது, சென்னை அரசாங்கத்தின் ஆலோசனையிலா, ஹைதராபாத் அரசாங்கத்தின் ஆலோசனையிலா? இவ்வளவு காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : சென்னை அரசாங்கத்தோடு இந்த வேலை நின்று விட்டால் கஷ்டம் இருக்காது; விரைவிலே முடிவு எடுக்கலாம். இப்போது தண்ணீர் கிடைப்பதற்கு சென்னை அரசாங்கம், ஆந்திரப்பிரதேச அரசாங்கம், மைசூர், மகாராஷ்ட்டிரம், அதோடு மத்திய அரசாங்கம் இவர்களோடு ஒன்று சேர்ந்து, கலந்து, முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. குலாதி கமிஷன் குடி தண்ணீரை சென்னைக்குக் கொடுக்கலாமென்று சொன்னதற்குப் பிறகு இதற்கு மற்றவர்கள் சம்மதம் தெரிவித்தும்கூட இதற்குப் பிறகு ஏற்படக்கூடிய பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. இதையெல்லாம் விரைவிலே தீர்ப்பதற்கு முயற்சி எடுக்கத்தான் பாடுபட்டு வருகிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நம் கோரிக்கை ரொம்பக் குறைச்சல். சென்னை நகரத்திற்கு குடி தண்ணீர் பிரச்னை மட்டும்தான் நம் கோரிக்கை சம்பந்தப்பட்டது. கிருஷ்ணா நதி தண்ணீர் பங்கீடு சம்பந்தமாக, மைசூர், ஆந்திரா இன்னும் மற்ற ராஜ்யங்கள் எப்போது ஒரு முடிவுக்கு வருவார்கள் என்று சொல்ல முடியாது. முடிவுக்கு வருவார்களா என்று சொல்லவாவது முடியுமா? சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருவதை தனிப் பிரிவாக எடுத்து விவாதிப்பதற்கு முயற்சி செய்யப்பட்டதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : நம் அரசாங்கத்தின் முயற்சி சென்னை நகரத்திற்குக் குடி தண்ணீர் கொண்டுவர வேண்டும் என்பதுதான். இதில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன.